புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 10. TML1149 - மண்டோதரியும் வண்டார் குழலியும்

முனைவர் ஆர்.நிர்மலா தேவி
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு –12

## முன்னுரை

கம்பராமாயணமும் இராவண காவியமும் ஓர் ஒப்பீடு .கம்ப இராமாயணம் தோன்றிய காலத் திலிருந்தே மக்களின் செல்வாக்கைப் பெற்றது. 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற பழமொழி கம்பரின் கவித்துவ ஆற்றலைப் புலப்படுத்தும். தேசியக் கவி பாரதியாரும் 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று கம்பரால் தமிழ்நாடு உயர்வு பெற்றதைப் பாராட்டினார். கம்பர் பெயரில் மன்றங்கள், கழகங்கள் தோன்றின. அவை கம்பர் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டன. கம்பராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களையும், 118 படலங்களையும் உடையது. இதில் 10589 பாடல்கள் உள்ளன.

புலவர் குழந்தை அவர்கள் இயற்றிய காப்பியம் இராவண காவியம். 56 படலங்களில் 2828 விருத்தங்களைக் கொண்டு இருக்கிறது. இதில், தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரிக் காண்டம், போர்க் காண்டம் என்ற ஐந்து காண்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த இராமாயணக் கதையிலிருந்து கற்பனையாகப் பாத்திரப் படைப்புகளை மாற்றி, இவர் பாடியுள்ளதால், காப்பியம் சிறு காப்பியமாக ஆகிறது. இராமாயணக் கதையில் உள்ள குறிப்புகளைக் கொண்டே தமது பாத்திரங்களை வடித்துள்ளது ஒரு சிறப்பே.

இராமாயணத்திற்கு எதிர்நிலைக் காப்பியமாக இராவண காவியம் திகழ்கிறது. இராமாயணத்தின் தலைமை மாந்தன் இராமன். இராவண காவியத்தின் காப்பியத் தலைவன் இராவணன். இராமாயணம் பக்தி உணர்ச்சியின் வெளிப்பாடு என்றால் இராவண காவியம் தன்மான இயக்க உணர்வின் வெளிப்பாடாகும். இராமாயணத்தின் எதிர்நிலைத் தலைவன் (ஷிவீறீறீணீவீஸீ) இராவணன்; இராவண காவியத்தின் எதிர்நிலைத் தலைவன் இராமன். இராமாயணத்திற்கும் இராவண காவியத்திற்கும் நீண்ட கால இடைவெளி உள்ளது என்றாலும், இராமாயணம் படைக்கப்பட்ட காலம் முதல் இந்திய மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து அவர்களை இயக்கி வந்துள்ளது.

சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள், 'தேனினும் இனிய செந்தமிழ்க் குழந்தை "நான் கம்பராமாயணக் கவிச்சுவையில் கட்டுண்டு கிடந்தனன். தங்கள் இராவண காவியம் அக்கட்டை அவிழ்த்துவிட்டது. கருத்து மாறுபாடு வேறு" என்று தன் நிலைப்பாட்டை விவரிக்கிறார். கம்பராமாயண அன்பர் புலவர் ஐயன் பெருமான் கோனார் அவர்கள், 'இனியொரு கம்பனும் வருவானோ இப்படியும் கவிதருவானோ? கம்பனே வந்தான், அப்படிக் கவிதையும் தந்தான். ஆனால், கருத்துத்தான் மாறுபட்டது" என்று மொழிக்கிறார்.

## மண்டோதரியும் வண்டார் குழலியும்

பார் போற்றும் கம்பராமயணத்தில் இராவணனின் கற்புக்கரசி மண்டோதரி வலம் வர இராவண காவியத்தில் புலவர் குழந்தை வண்டார்குழலி என்ற இனிமையான தமிழ்ப் பெயரைச் சூட்டியுள்ளார். மண்டோதரி என்னும் சொல்லுக்குப் பெரிய வயிற்றை உடைய பெண் என்னு பொருள். வண்டார் குழலி என்றால் வண்டு ஆரவாரம் செய்யும் கூந்தலை உடையவள் என்று பொருள் .

## மண்டோதரி குறித்த புராணக்கதை

மதுரா தேவலோக தேவதைகளில் மிகவும் அழகாக இருந்தாள். எல்லா தேவர்களும் அவளை

*ரகசியமாக விரும்பினர், ஆனால் அவள் இதயத்தில் அவள் சிவனை காதலித்தாள். அவரை மகிழ்விக்க அவள் பல வருடங்களாக தவம் செய்தாள், ஆனால் எந்த பலனும் இல்லை, ஏனெனில் சிவன் தனது தியானத்தில் தொலைந்து போனார். இறுதியாக அவள் அவனைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டு கைலாயத்தை அடைந்தாள். அங்கே அவன் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தான். அவள் அமைதியாக சிவனின் முன் கூப்பிய கைகளுடன் அமர்ந்தாள். சிறிது நேரத்திற்குப் பிறகு சிவன் கண்களைத் திறந்து, அழகான இளம் பெண் தன் முன் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவன் உடனடியாக காதலில் விழுந்தான், இரவு செல்லச் செல்ல அவர்களால் காதல் செய்வதைத் தவிர்க்க முடியவில்லை.*

*மறுநாள் காலை, வேலை நிமித்தமாக வீடு திரும்பிய சிவனின் துணைவி பார்வதி, தன் படுக்கையில் ஒரு விசித்திரமான பெண்ணைக் கண்டாள். அவள் கோபத்தால் கொதித்துப் போனாள். அவளுடைய கோபம் வளர்ந்து, "நீ இழிவான பெண்ணே, அடுத்த பன்னிரண்டு ஆண்டுகள் நீ ஒரு தவளையாக மாறி கிணற்றில் வாழ வேண்டும் என்று நான் சபிக்கிறேன்" என்று சாபமாக வெடித்தது. மதுரா கண்ணீர் விட்டார். சிவன் அவளை ஆறுதல்படுத்த முயன்றார், ஆனால் சாபத்தைத் திசைதிருப்ப வழி இல்லாததால் அவர் உதவியற்றவராக இருந்தார். சிவன், "மதுரா சாபத்தை என்னால் மாற்ற முடியாது, ஆனால் பன்னிரண்டு ஆண்டுகள் தவளையாக வாழ்ந்த பிறகு, நீ ஒரு அழகான பெண்ணாக மாறி, ஒரு பெரிய மனிதனை மணப்பாய் என்று நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்றார்.*

*இதற்கிடையில், அசுர மன்னன் மாயாவும் அவனது ராணி ஹேமாவும் ஒரு பெண் குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஏற்கனவே மாயாவி மற்றும் துந்துபி என்ற இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் ஒரு பெண்ணை விரும்பினர். அசுர மாயா ஒரு பெண் குழந்தையைப் பெறுவதற்காக பன்னிரண்டு வருட தவம் செய்யத் தொடங்கினார். பன்னிரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன, தவத்தின் கடைசி நாளில் ஒரு குழந்தையின் அழுகை சத்தம் கேட்டது. அவர்கள் அந்த அழுகையைத் தொடர்ந்து, அது அருகிலுள்ள கிணற்றிலிருந்து வெளிப்படுவதை உணர்ந்தனர். அவர்கள் கிணற்றில் எட்டிப் பார்த்தபோது தண்ணீரில் மிதக்கும் ஒரு அழகான பெண் குழந்தையைக் கண்டார்கள். அது மதுரா – தவளை, பன்னிரண்டு வருட தவளையாக வாழும் சாபத்தை முடித்து ஒரு பெண் குழந்தையாக மாறியது. அவர்கள் அவளுடைய அற்புதமான அழகால் ஈர்க்கப்பட்டு, "ஓ, கடைசியாக சிவன் எங்களுக்கு ஒரு பெண் குழந்தையை ஆசீர்வதித்துவிட்டார். அவளை எங்கள் மகளாக வீட்டிற்கு அழைத்துச் செல்வோம்" என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டனர்.*

*அவர்கள் அந்தப் பெண்ணைத் தங்கள் அரண்மனைக்கு அழைத்துச் சென்று அவளுக்கு மண்டோதரி என்று பெயரிட்டனர். மண்டோதரி மிகவும் அழகான பெண்ணாக வளர்ந்தாள், அவளுடைய அழகின் புகழ் அசுர மன்னர்களிடையே வளர்ந்ததால், ராவணன் அவளை மணக்க முயன்றான். ராவணன் ஒரு அழகான துணிச்சலான போர்வீரன் மட்டுமல்ல, வேத ஞானமும், ஒரு சிறந்த இசைக்கலைஞரும் கூட. மண்டோதரி உடனடியாக ராவணனைக் காதலித்து மணந்தார். அவருக்கு மேகநாதர், அதிகாயர் மற்றும் அக்ஷகுமார் என மூன்று மகன்கள் பிறந்தனர்.*

**கம்பர் காட்டும் மண்டோதரியின் இருப்பிடம்**

*இலங்கையில் உள்ள மற்ற அரண்மனைகளிலிருந்து மிகவும் அலங்கரிக்கப்பட்டு, வேறுபட்ட ஒரு பெரிய அரண்மனை. இது ராவணனின் அன்பு மனைவியும், கினேசியத்தில் உள்ள அனைத்து பெண்களின் எஜமானியுமான மண்டோதரிக்கு சொந்தமானது. அவர் சில மந்திர சக்தி வாய்ந்த அசுரர்களின் ராஜாவான மாயன் அல்லது மாயாசுரனுக்கும், ஒரு தெய்வீக தேவதை ஹேமாவுக்கும் பிறந்த மகள். ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ளபடி, சீதாவுடன் ஒரே பீடத்தைப் பகிர்ந்து கொள்ளும் உலகின் ஐந்து புனித பதிவிரதப் பெண்களில் மண்டோதரியும் ஒருவர்.*

*கம்பன் அவளுடைய அழகை பல இடங்களில் விவரிக்கிறான், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு. இன்றைய கவிதை கம்பனின் எட்டு கவிதைகளில் ஒன்று, மண்டோதரியை விவரிக்கிறது. அனுமன் அந்த தூங்கும் பெண்ணை முதல் முறையாகப் பார்க்கிறான், ஒரு ஆடம்பரமான கட்டிலில், மண்டோதரி அழகாக தூங்கிக் கொண்டிருந்தாள்*

*ஆமன்மதனுடைய மலரம்புகள் இட்டு வைத்த அம்பறாத் துணி போன்ற தளிர் போன்ற பாதங்களை ஆரம்பி, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலான மகளிர் தம் கரத்தால் வருடவும், சாமரம் வீசவும், கரும்பின் சுவை கசப்பு என்று சொல்லும்படியான இனிய சொற்களையுடைய மகளிர் யாழ் இசைக்கும் 'காமரம்' என்னும் இனிய பண் ஓசை செவியிலே நுழையவும், கற்பக மலரின் நறுமணம் நாசியில் வெளிப்படவும் (உறங்கினாள்).*

**வண்டார் குழலி**

*இரண்டாம் கடல்கோளுக்குப் பின்னர் தோன்றிய இலங்கையில் விச்சிரவாவு என்ற மன்னர் ஆட்சி புரிந்து வந்தார். அவ?ரடைய மனைவி கேகசி. இவர்களின் அன்பு வாழ்க்கையில் இராவணன் கும்பகன்னன், விபீடணன் என்ற மூன்று ஆண் குழந்தைகளும் அழகான சூர்ப்பனகை என்ற பெண்*

*குழந்தையும் பிறந்தது விச்சிரவாகு மரணத்திற்கு இலங்கையை இராவணன் நல்லாட்சி புரிந்தான். முல்லை நாட்டு மன்னன் மகள் மாயோனின் மகள் வண்டார்குழலியை இராவணன் காதலித்து திருமணம் செய்து கொண்டான். இருவருக்கும் சோயோன் என்ற மகன் பிறந்தான்.புலவர் குழந்தை வண்டார் குழலியின் பிறப்பினை தன் இராவண காவியத்தில்,*

'தண்டாமரை மலரோகனி தமிழோதமி ழகமோ
உண்டோர்மன முள்ளறவு வக்குந்தெளி தேனோ
கண்டோகனி யோவேறெது காணோமென வேதான்
வண்டார்குழலி என்றேபெயர் வைத்தார்மன மொத்தே'' (காட்சிப்படலம்–10)

*தாமரையோ, தேனோ, கற்கண்டோ என்று கூற முடியாத அளவிற்கு இனிமையானவள் என்று அவளுக்கு வண்டார்குழலி என்று பெயரிட்டு அழைத்தனர். தான் அறிவு தெளியும்படி கல்வி கற்று விளங்குகிறார். கற்றால் தான் வாழ்வில் உயர்வு உண்டு என்று எண்ணி இயற்றமிழைக் கற்றாள். இனிமையான இசையையுடைய இசைத்தமிழைக் கற்றாள். நடிப்பின் பாகுபாடுகளை அறிய நாடகத்தமிழ் கற்றாள். அதோடு தோற்கருவி, யாழ் என்ற அனைத்தும் கற்றுக்கொண்டாள். பெண்கள் அனைத்துக் கலைகளையும் கற்கவேண்டும். குறிப்பாக தற்காப்பு கலை முதன்மை பெற வேண்டும் என்பது தந்தைப் பெரியாரின் எண்ணம். அதுபோல வண்டார் குழலியும் அனைத்துவித கலைகளையும் கற்கிறாள். மேலும், அவளின் குணத்தைக் குறிப்பிடும் போது புலவர்,*

பாவைக்குல மெல்லாவள் படிமைக்குற வாடும்
கோவைக்குல மெல்லாமவள் குதலைக் கிடை நாடும்
காவிக்குல மெல்லாமவன் கண்ணுக்குற வாடும்
பூவைக்குல மெல்லாமவள் புள்ளுக்குல மாகும்'' (காட்சிப்படலம்–14)

*பொம்மைக் கூட்டம் எல்லாம் அவளது வடிவத்தைக் கொள்ளும், கோவைப் பழங்கள் எல்லாம் அவளின் இதழினை விரும்பும், குவளை மலர் கண்ணுக்கு நிகரானது. பறவைகள் எல்லாம் அவளுடன் பழகிய பறவையாக வேண்டும் என விருப்பம் கொள்ளும் தன்மையில் வண்டார் குழலி விளங்குகிறார். இராவணனின் காதல் களவு வழிப்பட்டதாகும். மலைவளம் காணச் சென்ற இராவணன் அங்கு முல்லை நாட்டு மன்னன் மாயோன் மகள் வண்டார்குழலி என்னும் பெயராளைக் கண்டு காதலுற்றான். அவளைக் கண்ட அளவில் 'மனமும் இரு கண்ணும் கருத்தும் ஒருங்கே பறிகொடுத்தான்; அவளைப் பற்றிய சிந்தனையில் மூழ்கினான்; அவளை இன்னாரெனத் தெரியாது தடுமாறினான்'.*

யாரோ இவள்தான் எவ்வூரோ அயலோ இக்குன் றினளோதான்
பேர்ஏ தோயா ரோஇவளைப் பெற்றோர் பருவம் உற்றனளோ
ஓரேன் நானே அதுவன்றி ஒப்பொன் பானும் உடையாளோ
காரோ மானாக் கருங்குழலாள் கருத்தும் எதுவோ அறியேனே

(இலங்கைக் காண்டம் –3 காட்சிப்படலம் – 78)

*பண்டைத் தமிழ் மரபிற்கு ஏற்ப, இராவணன் வண்டார் குழலியின் அழகால் ஈர்க்கப்பட்டு மயங்குவதை இதனால் அறியலாம். வண்டார் குழலியின் உள்ளமும் உணர்வும் தன்பால் உள்ளதை இராவணன் குறிப்பால் உணர்ந்தான். அவன் அவளிடம் 'நின்னைப் பிரியேன் பிரியேன்' என உரைத்தான்.*

**மகன் மரணம்**

*யுத்த காண்டம் இராவணன் சோகப் படலத்தில் பத்தே பத்துப் பாடல்களில்தான் சொல்லப்படுகிறது மண்டோதரி தன் மகனது உடல் மேல் வீழ்ந்து புலம்பும் காட்சி. போர்க்களத்திலிருந்து மைந்தன் உடலைச் சுமந்து வந்து, அரண்மனையில் கிடத்துகிறான் இராவணன். தவமிருந்து பெற்ற பிள்ளையின் உடல் தலையற்றுக் கிடக்கிறது. 'தாய்க்குத் தலைப்பிள்ளை, தந்தைக்கு இளையபிள்ளை' என்பார்கள். இன்னின்னார்க்கு ஈமக்கடன் செய்ய உரிமை பெற்றோர் இவரிவர் என்பதால் மட்டுமல்ல, பிள்ளைகள் மீது பெற்றோர் காட்டும் அன்பின் சிறு வேறுபாட்டிலும் இது பொருந்தும் என்பார்கள். கருங்குழல் கற்றை கால்தொட, கைகளால் முலைமேல் கொட்டியபடி ஓடி வருகிறாள் மயன்மகள்.*

தலையின்மேல் சுமந்த கையள் தழலின்மேல் மிதிக்கின்றாள் போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள் நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேல் குறித்த வேடன் கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.

(கம்பராமாயணம் – யுத்தகாண்டம் – )

*தலையின் மேல் கூப்பிக் கோர்த்த கைகளை உடையவளாய், நெருப்பின் மேல் நிற்பது போல நிலத்தின்*

*மேல் நிற்கும் கால்களை உடையவளாய், வேடன் கணைபட்டு உயிர் துறந்து மலைமீது வீழ்ந்த மயிலைப் போல, நேசத்தால் நிறைந்த நெஞ்சையுடைய மண்டோதரி தன் மகன் உடல் மீது வீழ்கிறாள்.*

*அமாவாசை எனப்படும் கார்உவா தொடங்கி, பௌர்ணமி எனப்படும் வெள்உவா நாள் வரை பதினாறு நாட்கள். அமாவாசையன்று ஒரு கலையோடு இருக்கும் சந்திரன், நாளும் ஒரு கலை கூடி, பௌர்ணமியன்று பதினாறு கலைகளும் கூடி முழுநிலவாய்ப் பொலிகிறான் என்பர். அப்படிக் 'கலைகள் ஒவ்வொன்றாய்க் கூடி வளரும் உன் இளம்பருவத்திலேயே – பதினாறு வயதிற்கு முன்பே – உன் வில்லாற்றலால் இந்திரனையே வெல்லக் காண முன்பு ஓர் தவம் செய்தேன். ஆனால், தலையிலா யாக்கை காண எத்தவம் செய்தேன்? அந்தோ!' என்று புலம்புகிறாள் மண்டோதரி.*

*எத்தனை பெரிய வீரனும் எந்த வயதிலும் தன் தாய்க்குச் சிறு பிள்ளைதான். மேகநாதன் இளம் வயதிற்கே உரிய அழகிய அறியாமையால் திங்களின் மருவை முயல் என நினைந்து பற்றி இழுத்ததும், சிங்கங்களைப் பற்றிக் கொணர்ந்து அவற்றின் மோதலைப் பார்த்து கைகொட்டிச் சிரித்ததும், தன் வில்லாற்றலால் இந்திரனை வென்றதும் மண்டோதரியைப் பொருத்தவரை தன் மகனின் பிள்ளை விளையாட்டுதான். தேவரையும் மூவரையும் வென்ற தன் பிள்ளை, மானிடரில் ஒருவனால் வீழ்ந்துபட்டுத் தலையற்றுக் கிடப்பதைக் காண முடியவில்லை அவளால். இறுதியில் சொல்கிறாள் மண்டோதரி. மிகவும் புகழ்பெற்ற பாடல் இது.*

பஞ்சுஎரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்டது இல்லை
அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றே.

(கம்பராமாயணம் – யுத்தகாண்டம்)

*'தீப்பட்ட பஞ்சு போல அரக்கர்தம் கடல் போன்ற படைகளெல்லாம், கடும் கோபம் கொண்ட மனிதர்கள் கொல்ல அழிந்துவிட்டதே. மீளவே இல்லையே. முன்பும் அஞ்சினேன். இப்போதும் அஞ்சுகிறேன். அந்த சீதை எனும் அமுதால் செய்த நஞ்சினால் இலங்கை வேந்தனான இராவணனுக்கும் நாளை இந்நிலைதானே வரும்?'*

**இராவணன் வீர மரணம்**

*இராவணன் பரு உடல், பார்மீது கிடந்தது; அவன் ஆருயிர் அனைய மனைவி மண்டோதரி, அவன் உடல்மீது விழுந்து படிந்து, புரண்டு அழுதாள்.*

*"எள் இருக்கும் இடமும் இன்றிச் சீதையைக் கரந்த காதல் உள்ளிருக்குமோ என்று தடவியதோ இராமன் வாளி" என்று கதறி அழுதாள்.*

"வெள்எருக்கஞ் சடைமுடியான் வெற்புஎடுத்த
திருமேனி மேலும்கீழும்
எள்இருக்கும் இடன்இன்றி உயிர் இருக்கும்
இடன்நாடி இழைத்த வாறோ?
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ? ஒருவன் வாளி" (கம்ப. யுத்த காண்டம் – இராவணன் வதை படலம் 237)

*என்று ஏங்கினாள்; அவன் உயிரைத் தேடித் தன் உயிரை அனுப்பினாள்; அது திரும்பவே இல்லை. இராவணன் அம்பு பட்டு வீழ்ந்து கிடக்கிறான். இராமனின் அம்பு இராவணன் உடல் முழுவதும் துளைத்துள்ளதை மண்டோதரி பார்க்கிறாள். சிவபெருமான் உறையும் மலையைக் கைகளால் எடுத்த வலிமை உடையது அவனது திருமேனி. அத்திருமேனியில் எள் இருக்கக் கூட இடம் இல்லாமல் அம்பு துளைத்து உள்ளது. அம்பு இராவணன் உடலில் புகுந்து அவன் உயிர் இருக்கும் இடத்தை மட்டும் தேடவில்லை. இராவணன் சீதையை மனச் சிறையில் வைத்து மறைத்த காதலைத் தேடித் தேடி அம்பு துளைத்து உள்ளதாம். சானகியைப் பற்றிய நினைவைக் கூட அம்பு விட்டு வைக்கவில்லையாம். கம்பர் கற்பனை, கவிதைச் சுவையின் உச்சத்திற்கே படிப்பவரைக் கொண்டு செல்கிறது. இராமன் அம்பு இராவணன் உடல் முழுவதும் துளைத்ததைக் கம்பர் சீதையின் நினைவு எங்குள்ளது? எங்குள்ளது? என்று தேடித் தேடிச் சென்றதாகப் புனைந்துள்ளார்.*

*இராவணன் இறந்துபட்டான் என்பதனை எண்ணி விம்மி விம்மி அழுதாள். தன் கரங்களால் அவன் மார்பினைத் தழுவினாள். தழுவியவள் தன்னுயிரை நீக்கினாள். ஆனால் "வான்மீகியில் இராவணனின் இறந்த செய்தி கேட்ட மண்டோதரி கலங்கிய நெஞ்சினளாய் வாய்விட்டு அலறினாள்.உன்னோடு நானிறக்கவில்லையே என்று வருந்தி, துயரம் மிக்கவளாய்க் கதறும் மண்டோதரியை மற்ற மனைவியர்*

*அரண்மனைக்குச் செல்வது போலவே மாணிக்கவாசகரின் பாடல் ஒன்று காணப்படுகின்றது.*

"ஏர்தரும் ஏழுகேத்த எவ்வுருவுந் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி (திருவாசகம் – குயிற் பத்து– பாடல் 2)

*இதனையே புலவர் குழந்தை அவர்கள் இராமனுக்கும் இராவணுக்கும் இடையே போர் மூண்டது. கும்பகன்னன் போரில் வீர மரணமடைந்தார். அதனைக் கேள்வியுற்று வருத்தமடைந்திருந்த இராவணன் அவருடைய மகன் சேயோன் தேற்றினார். அதன் பின் சேயோனும் போரில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்தார். தமயனும், மகனும் இறந்ததை அடுத்து இராவணன் போரில் ஈடுபட்டார்.*

*இராமனால் இராவணனின் தேர்ப்பாகன் கொல்லப்பட்டார், வீடணனால் இராவணனின் தேர்க் குதிரைகள் கொல்லப்பட்டன. மாதலி என்பவர் கொடுத்த அம்பினை இராமன் எய்தார். அதன் மூலம் இராவணனும் வீரமரணம் அடைந்தார். இராவணின் போர்க்களத்தில் இறந்த பிறகு, மனம் தாங்காமல் உயிர் நீத்தாள்.*

புல்லி யேயுடல் போர்த்தொரு மைப்படக்
கொல்ல னூதுங் குருகிற் பொருமியே
வல்லு யிர்த்திதோ வந்தன னென்றுளே
சொல்லி யேமுகந் தொட்டுயிர் விட்டனள்" (இறைவீழ் படலம்–41)

*தன் வாழ்நாள் முழுவதும் ஒன்றாக வாழ்ந்த கணவனின் இறந்த உடலைக்கண்டு இதோ, நானும் வந்துவிட்டேன் என்ற மனத்துக்குள்ளே கூறித் தலைவன் முகம் தொட்டு உயிர் நீக்கிறாள்*

**முடிவுரை**

*புலவர் குழந்தை அன்றும் இன்றும் வண்டார்குழலி தன் கணவன் செய்யும் தவறான செயல்களைக் கடிந்தாலும் தன் கணவன் இறந்தவுடன் தானும் இறந்தமையால் கற்புக்கரசியருள் ஒருத்தியாக மதிக்கப்படுகிறாள். அகலிகை, சீதை போன்ற பல பாத்திரப் படைப்புகளையெல்லாம் வால்மீகி ராமாயணத்திலிருந்து எடுத்துக்காட்டிய ஆசிரியர் சற்றே மாறுபட்டு மண்டோதரியை மட்டும் கம்பனிலிருந்து விளக்குகிறார்.*

*வால்மீகியின் மண்டோதரி – இறக்கவில்லை.கம்பன் மண்டோதரி – இறக்கிறாள்; இறந்தும் இறவாமல் வாழ்கிறாள், நம் உள்ளங்களில்! கம்பனால் 'நேசத்தால் நிறைந்த நெஞ்சள்' என்ற சொல்லால் ஆளப்பட்டிருப்பவள் ஒரு தாய். அவள் மண்டோதரி. அசுர சிற்பியாகிய மயனின் மகள். இராவணனின் பட்டத்தரசி. இந்திரசித்தன் எனப்படும் மேகநாதனின் தாய். மண்டோதரி புலம்பலில் நாம் சோகத்தையும், வாழ்வின் நிலையாமையும், ஆறாம் பிறழ்ந்த வாழ்வின் முடிவும், விதியின் வலியும் , இறைத் தத்துவங்களையும் காண முடியும் சீதை, திரௌபதி, அகலிகை, தாரை, மண்டோதரி ஆகிய ஐந்து அன்னையரை (பஞ்சமாதர்) நாள்தோறும் நினைத்தால் செய்த பாவங்களிலிருந்து விடுபடலாம் என்று பொருள்படும் சுலோகம் ஒன்று வடமொழியில் இருப்பது நினைவிற்கு வருகிறது. தன் தாய் பட்டினியில் கிடக்க, அதைக் கண்டும் காணாது தான் மட்டும் வயிறாற உண்டு உறங்கி உயிர்த்து வாழும் மகவு, பிற எந்தத் தாயை நினைத்தாலும் பணிந்தாலும் எந்தப் புண்ணியமில்லை. நமக்கு இந்த உலகம் நம் அன்னை தந்தது. நிற்க.*

**துணைநூற் பட்டியல்**


1) புலவர் குழந்தை இராவண காவியம்

2) கம்பராமாணயம் மூலமும் உரையும் – 2019 ச.வே.சுப்பிரமணியன் உரைஈ மணிவாசகர் பதிப்பகம் – சென்னை

3) திருவாசகம் – கழக வெளியீடு